# தருமபுரியில் நல உதவிகள் - முதல்வர் வழங்கினார்!

13ஆம் பக்கத் தொடர்ச்சி

புதிய மின்னணு குடும்ப அட்டைகள், அரசு கேபிள் டி.வி சார்பில், 246 / பயனாளிகளுக்கு எச்.டி. செட்அப் பாக்ஸ் (HD Setup Box), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 7,485 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம், 3,063 பயனாளிகளுக்கு ஊரக குடியிருப்பு பழுது நீக்கம் திட்டத்தின் கீழ் உதவிகள், 337 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமான திட்டன் கீழ் உதவிகள்;

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்**, 20 பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள், கூட்டுறவுத் துறை சார்பில், 2010 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழு கடன்கள், பயிர் மற்றும் கால்நடை பராமரிப்புக் கடன்கள், **மகளிர் திட்டம் சார்பில்**, 3011 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழு வங்கி கடன் இணைப்புகள், **வேளாண்மை - உழவர் நலத் துறை சார்பில்**, 2981 பயனாளிகளுக்கு வேளாண்மை இயந்திரமய மாக்கல் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டம், சிறுதானிய செயல் விளக்க திடல், பயறுவகை செயல் விளக்கத் திடல், எண்ணெய் வித்துக்கள் செயல் விளக்கத் திடல், குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் ஆகிய வற்றின் கீழ் உதவிகள், **தோட்டக்கலைத் துறை சார்பில்**, 500 பயனாளிகளுக்கு நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் சொட்டுநீர் பாசன கருவிகள்;

**வேளாண்மை பொறியியல் துறை சார்பில்**, 200 பயனாளிகளுக்கு வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டம், பழைய திறனற்ற மின் மோட்டார்களுக்கு மாற்றாக மானியத்தில் புதிய மின் மோட்டார் வழங்குதல், பயிர் சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் சூரிய சக்தியில் இயங்கும் மின் மோட்டார் அமைத்தல், சூரியசக்தியில் இயங்கும் மின் வேலிகள், வனத்துறை சார்பில், 504 பயனாளிகளுக்கு தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் உதவிகள், பயிர் சேதத்திற்கான இழப்பீடு வழங்குதல், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில், 128 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மீன்வளத் துறை சார்பில், 180 பயனாளிகளுக்கு நலவாரிய அடையாள அட்டைகள், பரிசல் சான்று, கூட்டுறவு உறுப்பினர் சேர்க்கை அட்டைகள், பழங்குடியினர் நலத்துறை சார்பில், 378 பயனாளிகளுக்கு வன உரிமைச் சட்டத்தின் கீழ் தனி நபர் பட்டா வழங்குதல், நல வாரிய அட்டைகள் வழங்குதல், இயற்கை மரணம், ஈமச்சடங்கு உதவித்தொகை, தாட்கோ சார்பில், 326 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய அடையாள அட்டை, நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், தொழில் முனைவு திட்டம், துரித மின் இணைப்பு திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 800 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், 106 பயனாளிகளுக்கு கலைஞர் கைவினைத் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, புதிய தொழில் முனைவோர் தொழில் உருவாக்கும் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 5,390 பயனாளிகளுக்கு பணியிடத்து விபத்து மரணம், இயற்கை மரணம், விபத்து மரணம், திருமணம், கல்வி உதவித் தொகைகள், வீட்டுவசதி திட்டம், முதியோர் ஓய்வூதியத் தொகை, புதிய பதிவு அட்டை வழங்குதல், சமூக நலன் துறை சார்பில், 143 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவிகள், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், 35 பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தின் கீழ் உதவிகள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில், 120 பயனாளிகளுக்கு நான் முதல்வன் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் உதவிகள் என பல்வேறு துறைகளின் கீழ் உதவிகள்;

**என மொத்தம் 830 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 70,427 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் வழங்கினார்.**

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன், வேளாண்மை - உழவர் நலத்துறை செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ், வேளாண்மை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலைத்துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ. சதீஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மௌலிவாக்கம் ஊராட்சியில் பொதுமக்கள் மற்றும் பொதுநலச் சங்க நிர்வாகிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றி குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர் கௌரி தாமோதரன், அரசு அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வேதாரண்யம் வட்டம் – தாணிக்கோட்டகத்தில் – ஓய்வு பெற்ற

# அரசுப் பள்ளி தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா!

## பெற்றோர்– ஆசிரியர் சங்கத் தலைவர் முரசொலி சிங்காரம் மாணவர்களுக்கு நிதி உதவி!

சென்னை, ஆக. 18 -
நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா தாணிக்கோட்டகத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு தலைமை ஆசிரியராக பணியாற்றிய வர் தமிழ்ச்செல்வன் 41 ஆண்டுகள் ஆசிரியராக வும், அதில் 23 ஆண்டு கள் தாணிக்கோட்டகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார். இவர் பணியாற்றிய அனைத்து பள்ளிகளிலும் நூறு சதவீத தேர்ச்சி கிடைக்க காரணமாக இருந்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் செல்வன் நேற்று முன்தினம் பணி ஓய்வு பெற் றார். அவரின் பணியை பாராட்டி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மற் றும் ஊர் மக்கள் ஒன்று கூடி பாராட்டு விழா நடத் தினர். பள்ளியில் நடந்த விழாவில் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் தமிழ் செல்வனுக்கு எடைக்கு எடை (75 கிலோ) புதிய நாணயங்களை பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கினார்.

விழாவிற்கு பின்னர் அவரை குதிரை பூட்டிய சாரட் வண்டியில் வீடு வரை அழைத்து சென்று மரியாதை செய்தனர். அப்போது பள்ளி மாண வர்கள், பெற்றோர். பொது மக்கள் ஊர்வலமாக உடன் சென்றனர். ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருக்கு ஊர்கூடி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கோயில் திருவிழா போல் பாராட்டு விழா நடத்தியது அனை வரை யும் வியப்படைய வைத்துள்ளது.

பள்ளி வளர்ச்சி நிதிக்கு ரூ.1 லட்சம் நன் கொடையை தமிழ்ச்செல் வன் வழங்கினார் மேலும் பள்ளியில் நூறு சதவீத தேர்ச்சிக்கு பாடுபட்ட 19 ஆசிரியர்களுக்கு ரூ.55 ஆயி ரம், உயர்கல்வி படிக்கும் மூன்று மாணவர்களுக்கு உதவித்தொகையாக ரூ.70 ஆயிரம் என ரூ. 1 லட்சத்து 65 ஆயிரத்தை முரசொலி சிங்காரம் தனது சொந்த செலவில் வழங்கினார். விழாவில் பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் கார்த்தி கேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சுதந்திர தின விழாவில்

# முதல்வரிடம் கல்பனா சாவ்லா - இளைஞர் விருதுகளைப் பெற்ற செல்வி துளசிமதி முருகேசன் - விருதாளர்கள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக.18-
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சுதந்திரத் திரு நாள் விழாவில், கல்பனா சாவ்லா விருதினை பெற்ற செல்வி துளசிமதி முருகேசன் மற்றும் முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது களைப் பெற்ற விருதா ளர் கள் தமிழ்நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த் துப் பெற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.8.2025 அன்று சென்னை, தலைமைச் செய லகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திரு நாள் விழாவில், துணிவு மற் றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

மேலும், தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள், 2025-ஆம் ஆண்டிற்கான முதல மைச்ச ரின் மாநில இளைஞர் விருது களை விழுப்புரம் மாவட் டத்தை சேர்ந்த சி. சந்துருகுமார், திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த மு. ஜெயக்குமார், சேலம் மாவட் டத்தை சேர்ந்த த. மாரியப் பன், சென்னை மாவட் டத்தை சேர்ந்த செல்வி.ம. காஜிமா, புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த திரு மதி. அ.லாவண்யா, கிருஷ்ண கிரி மாவட்டத்தை சேர்ந்த செல்வி.கு.கௌரி ஆகியோ ருக்கு வழங்கி சிறப்பித்தார்.

முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் ஒவ் வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரையுள்ள மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது ரொக் கப்பணம், பாராட்டுச் சான்று மற்றும் பதக்கம் ஆகிய வற்றை உள்ளடக்கியதாகும். 2021-ஆம் ஆண்டு முதல் முத லமைச்சரின் மாநில இளை ஞர் விருதி ற்கான ரொக்கப் பணம் ரூ.50,000/லிருந்து ரூ.1,00,000/ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

**2025-ஆம் ஆண்டிற்கான முத லமைச்சரின் மாநில இளைஞர் விரு துகளுக்கு தேர்வு செய்யப்பட்ட ஆண்கள் பிரிவு விவரம்:-**

1. விழுப்புரம் மாவட் டத்தை சேர்ந்த சி. சந்துருகு மார், 'மனிதம் காப்போம்' அறக்கட்டளையின் மூலம் சமூக நலன் மற்றும் சமூக மேம்பாட்டிற்கு தன்னை அர்ப்பணித்து கொண்டதற் காக சிறப்பிக்கப்படுகிறார். அவர் சாலையோரங்களில் வசிப்பவர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு உணவு விநியோ கம் செய்தல், மரம் நடுதல், உயிர்காக்கும் இரத்த தான முகாம்களை ஏற்பாடு செய் தல், வெள்ள நிவாரண நடவ டிக்கைகள், போதைப்பொ ருள் உபயோகம் மற்றும் போக்சோ சட்டம் குறித்த விழிப்பு ணர்வு பிரச்சாரங்களை நடத்துதல் போன்ற பல்வேறு முயற்சி களை முன்னெடுத்துள்ளார்.

2. திருநெல்வேலி மாவட் டத்தை சேர்ந்த மு. ஜெயக்கு மார், சமூகத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட குறிப்பாக ஆதரவற்ற நிலையில் கைவி டப்பட்ட முதியவர்கள் மற் றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவ தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டுள் ளார். அவரது இரக்கமுள்ள செயல்களால் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றியது மட்டுமல்லாமல், வசதியற்ற வர்களுக்கு கண்ணியம், பாது காப்பு மற்றும் நம்பிக்கை யையும் மீட்டெடுத்துள்ளா ர். மேலும் அவர் இரத்த தான முகாம்கள், உடல் உறுப்பு தானம், தாய்ப்பால் தானம், புற்றுநோய் நோயாளிக ளுக்கு முடி தானம், மரம் நடு தல் மற்றும் திருநங்கை சமூ கத்தை ஆதரித்து விழிப்பு ணர்வு பிரச்சாரம் செய்தல் உள்ளிட்டவற்றில் தீவிரமாக பங்கேற்றுள்ளார்.

3. சேலம் மாவட்டத்தை சேர்ந்த த. மாரியப்பன், ஒரு எளிய கிராமத்தில் பிறந்து இந்தியாவின் மிகவும் புகழ் பெற்ற பாராதடகள வீரர்க ளில் ஒருவராக உயர்ந்துள் ளார். 2016 ரியோ பாராலிம்பிக்கில் தங்கப் பதக் கம் வென்றது உட்பட பல பட்டங்களை வென்றார். இந்த முயற்சிகளை சிறப்பிக் கும் வகையில், பத்மஸ்ரீ மற் றும் அர்ஜுனா விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன. ஜப்பானில் நடைபெற்ற 2020 டோக்கியோ பாராலிம்பிக் கில் வெள்ளிப் பதக்கம் வென் றதற்காக மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதும் அவ ருக்கு வழங்கப்பட்டது. 2024 பாரிஸ் பாராலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற தன் மூலம், தொடர்ச்சியாக மூன்று பாராலிம்பிக்கில் பதக் கங்களை வென்று வரலாற் றைப் படைத்தார்.

**பெண்கள் பிரிவில் தேர்வு செய் யப்பட்ட நபர்களின் விவரம்:-**

1. சென்னை மாவட் டத்தை சேர்ந்த செல்வி.ம. காஜிமா, வட சென்னையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, குழந்தையாக இருந் தபோதே கேரம் மீதான தனது விருப்பத்தை கண்ட றிந்தார். ஒரு பொழுதுபோக் காகத் தொடங்கிய கேரம் விளையாட்டு விரைவில் இவ ரின் வாழ்க்கையின் ஒரு முக் கிய அம்சமாக மாறியது. அசைக்க முடியாத கவனம் மற்றும் தொடர் பயிற்சியு டன், அவர் தனது திறமை களை மெருகேற்றினார், 2024, கலிபோர்னியாவில் நடைபெற்ற 6வது உலக கேரம் சாம்பியன்ஷிப்பில் ஒற்றையர், இரட்டையர் மற் றும் குழு போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று வரலாறு படைத்தார்.

2.புதுக்கோட்டை மாவட் டத்தை சேர்ந்த திருமதி. அ. லாவண்யா, அவரது பணி குடிமைப் பொறுப்பு, சுற்றுச் சூழல் மேலாண்மை மற்றும் பொது விழிப்புணர்வு தேசத் தைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் ஈடுபாட் டிற்கு ஒரு முன்மாதிரியாக அமைகிறது. மேலும், இவர் பொது சுகாதாரம் மற்றும் தூய்மைத் திட்டங்களில் தீவி ரமாக பங்கேற்று, போதை ப்பொருள் பயன்பாடு மற் றும் புகைபிடிப்பதன் ஆபத்து கள் குறித்து பொதுமக்க ளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முயற்சி களை முன்னெடுத்துள் ளார். சாலைப் பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் பாது காப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், இரத்த தான முகாம்கள் மற்றும் கிராம அளவிலான விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி யுள்ளார்.

3. கிருஷ்ணகிரி மாவட் டத்தை சேர்ந்த செல்வி.கு. கௌரி, தனது 'அன்பு செய் வோம்' அறக்கட்டளையின் மூலம் பழங்குடி கிராமங்களில் வாழும் மக்க ளின் வாழ்க்கை, கல்வி, சுற் றுச்சூழல் மேலாண்மை மற் றும் மனிதாபிமான நலன் களை ஒன்றிணைத்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 10 கிராமங்களில் 150 க்கும் மேற்பட்ட பழங்குடி மாணவர்களுக்கு இலவசக் கல்வியை தனது 'பயிலகம் மையம்' மூலம் வழங்கி வரு கிறார். மேலும், அவர் தண் ணீர் தொட்டிகளை சுத்தம் செய்தல், மரம் நடுதல், சுகா தார மேம்பாடு ஆகிய பணிக ளிலும் ஈடுபடுகிறார். இவர் தனது அறக்கட்டளை மூலம் ஆதரவற்ற குழந்தைகள் மற் றும் குடும்பங்களுக்கு உணவு, எழுதுபொருட்கள், விளை யாட்டு உபகரணங்கள் மற் றும் பிற அத்தியாவசியப் பொருட்களை தொடர்ந்து வழங்கி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சுதந்திரத் திரு நாள் விழாவில், கல்பனா சாவ்லா விருதினை பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி துளசிமதி முருகேசன், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுக ளைப் பெற்ற விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த சி.சந் துருகுமார், திரு நெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த மு. ஜெயக்குமார், சேலம் மாவட் டத்தை சேர்ந்த த. மாரியப் பன், சென்னை மாவட் டத்தை சேர்ந்த செல்வி. ம. காஜிமா, புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த திரு மதி. அ.லாவண்யா, கிருஷ்ண கிரி மாவட்டத்தை சேர்ந்த செல்வி.கு.கௌரி ஆகியோர் தமிழ்நாடு துணை முதலமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர் களை 15.8.2025 அன்று சந் தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர்

# தொல்.திருமாவளவன் சிற்றன்னை செல்லம்மாள் மறைவு!

## சொந்த ஊரான அரியலூர் அங்கனூரில் இன்று இறுதிச் சடங்குகள்!



பெரம்பலூர், ஆக.18-
பெரம்பலூர் தனலெட் சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்று வந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர்- சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமா வளவன் அவர்களின் சிற் றன்னை செல்லம்மாள் (78) என்பவர், 17.08.2025, ஞாயிற்றுக்கிழமை, காலை சுமார் 6.50 மணியளவில் மருத்துவமனையில் காலமா னார். இவரது உடல் சொந்த ஊரான அரியலூர் மாவட் டம் அங்கனூர் கிராமத் திற்கு கொண்டு செல்லப் பட்டு, அங்கு அரசியல் கட்சி பிரமுகர்கள், பொது மக்கள் அஞ்சலிக்காக வைக் கப்படுகிறது. இன்று 18.08.2025, திங்கட்கிழமை மதியம் நல்லடக்கம் செய் யப்படுகிறது.

தனது சிற்றன்னை மறை வையொட்டி தொல்.திரு மாவளவன் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ள தாவது:-

எனது சிற்றன்னை செல் லம்மாள் (78)அவர்கள் சற்று முன் இயற்கை எய்தினார்.

கடந்த ஆக 07 அன்று மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு சுயநினைவு இழந் தநிலையில் பெரம்பலூரில் உள்ள தனலட்சுமிசீனிவா சன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனும திக்கப்பட்டார். மிகுந்த கவ னத்தோடு மருத்துவர்கள் தீவிர கண்காணிப்புடன் சிகிச்சை அளித்தனர். எனி னும், பலனின்றி தற்போது காலமானார்என்பது பெருந் துயரமளிக்கிறது.

பள்ளிப் பருவத்தில் எனக்கு ஆடை உடுத்தி, தலையில் எண்ணெய்த் தடவி இரட்டை சடைபின் னிவிட்டுப் பள்ளிக்கு அழைத்துச் சென்ற தாய்! தந்தை என்னைக் கண்டிக் கும் போதெல்லாம் எனக் காக வாதாடிய தாய்! வீட் டில் மூத்த மகன் என்பதால் 'பெரியதம்பி, பெரியதம்பி' என்று என்னைச் செல்ல மாக அழைத்த தாய்! நான் பட்டவகுப்பை முடித்த காலத்திலிருந்து, 'படித்தது போதும் கல்யாணம் பண்ணு பா' என அறிவுறுத் திய தாய்! பத்தாண்டுக ளுக்கு முன்னரே பக்கவா தத்தால் உடல் நலிவுற்று நினைவு தடுமாறி வீட்டி லேயே முடங்கிய நிலையி லும் எப்போதாவது நான் ஊருக்குச் செல்லும்போது, என் குரல் கேட்டதும் 'தம்பீ தம்பீ' என்று ஓடிவந்து என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு அன்பைப் பொழிந்த தாய்! இன்று எம் மோடு இல்லை என்பது வாழ்வே வெறுமையாய் உள்ளது. துக்கத்தால் மனம் கனக்கிறது.

அப்பா(2010), அக்கா, (2020), சின்னம்மா (2025) என அடுத்தடுத்து இழப்பு களை எதிர்கொள்ளும் அவ லம். துயரங்களைத் தாங் கும் நிலை. அம்மாவுக்கு எனது வீரவணக்கம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம்

# தஞ்சை எஸ்.சதாசிவம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்



தஞ்சாவூர், ஆக.18 –
தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம் – மருத்துவக் கல்லூரி பகுதிச் செயலாளர் எஸ்.சதாசிவம் அவர்கள் (வயது 75) நேற்று (17.08.2025) காலை 8.30 மணியளவில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மறைந்த சதாசிவம் தஞ்சை பகுதியில் இயங்கி வந்த பஞ்சாலை தொ.மு.ச தலைவராகவும், வட்டக் கழகச் செயலாளராகவும், நகர மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வைத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும், இளந்தலைவர்மீதும் மாறாப் பற்றுக் கொண்டவர். கழகம் அறிவித்த அனைத்து ஆர்ப்பாட்டம் போராட்டங்களிலும் பங்கு பெற்று சிறை சென்றவர்.




தி.மு.க. இளைஞர் அணி



சென்னை தெற்கு மாவட்ட நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்குட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணிக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில், சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சைதாப்பேட்டை, வேளச்சேரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ள பகுதி, வட்ட, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 18.08.2025 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. சென்னை தெற்கு மாவட்டத்தில் இந்த இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 17-08-2025

கலைஞர் 100 1924 - 2023

